


கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர், 176 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம் தலைமையில் மாபெரும் பொதுகூட்டம் வேளச்சேரி விஜய நகரில் நடைபெற்றது. இதில் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், முன்னாள் எம்.பி. பீட்டர் அல்போன்ஸ் (காங்), தயாநிதி மாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, துணைமேயர் .மு.மகேஷ்குமார், காசி முத்து மாணிக்கம், வே.கௌதமன், செல்வி.நிவேதாஜெசிகா, த.விஷ்வநாதன், மு.மனோகரன், திருமதி. பா.வாசுகிபாண்டியன், பகுதி செயலாளர் அரிமா சு.சேகர், துரைகபிலன்,எஸ் .பாஸ்கரன் எம்.சி., கழக ரமேஷ், த.ஜெகதீஸன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று (05.03.2025) மலேஷிய நாட்டின் பினாங் மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் இயக்குநர், பினாங்கு மாநாட்டு பணியகம் YB Wong yuee Harng, அஸ்வின் குணசேகரன் தலைமை நிர்வாக அதிகாரி பினாங்கு மாநாட்டு பணியகம் . பத்திரிக்கை மற்றும் ஊடகவியாளார்கள் தமிழ்நாட்டை பற்றி அறிந்து கொள்ளும் வகையில் ”FamTrip நிகழ்வாக சென்னைக்கு வருகை புரிந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று நாட்கள் சுற்றுலாவில் தமிழ்நாட்டின் தொன்மை வாய்ந்த கலை, இலக்கியம், கலாச்சாரம் மற்றும் ஆன்மீகம் போன்றவற்றை அறிந்து கொள்ளும் விதமாக காஞ்சிபுரம், மாமல்லபுரம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க சுற்றுலாத்தலங்களை கண்டுகளித்தார்கள். இந்நிகழ்வின் போது அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் தலைவர் த.சு.வ.கழகம் டாக்டர் க.மணிவாசன் மற்றும் சுற்றுலா ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ் உடன் இருந்தனர்.

### சென்னை மேற்கு மாவட்டம் – ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி சார்பில்,

# சென்னை, அண்ணா சாலையில் “தண்ணீர் - நீர்மோர் பந்தல்” திறப்பு!

## கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை திறந்து வைத்தார்!




சென்னை,மார்ச்.6-

“தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் கோடைக்கால வெப்பம் அதிகரிக்கத் தொடங்கி, மார்ச் மாத துவக்கத்திலேயே வெப்பம் அதிகரித்துள்ள நிலையில் தமிழக மக்களை இக்கோடைக் கால வெப்பத்திலிருந்து காக்கும் வகையில், ‘தண்ணீர் - நீர்மோர் பந்தல்’ அமைத்து, அவற்றில் குடிநீர், நீர்மோர், இளநீர், குளிர்பானம், தர்பூசணி போன்ற கோடை வெப்பத்தை தணிக்கும் பொருட்களை பொது மக்களுக்கு வழங்கி, அவர்களின் தாகத்தை தணிக்க வேண்டுமென” தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் உத்தரவின்படி;

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. - ஆயிரம்விளக்கு பகுதிக் கழகத்தின் சார்பில், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா. பா.அன்புதுரை அவர்கள் தலைமையில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு - ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன் ஆகியோர் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் அருகே, அண்ணா சாலையின் ஓரத்தில் அமைக்கப்பட்ட ‘தண்ணீர் - நீர் மோர் பந்தலினை’ தி.மு.க. இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை - துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின் ஆகியோர் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நீர் மோர், இளநீர், வெள்ளரிக்காய், கிர்ணி பழம், தர்பூசணி, ரோஸ்மில்க் போன்ற வெப்பத்தை தணித்து, உடலுக்கு குளிர்ச்சி தரும் பொருட்களை வழங்கினர்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ். ராஜ், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி நிர்வாகிகள் கோ.ரவி, மு.வெங்கடேசன், டி.வைலட்மேரி, எம்.ஜெயக்குமார் - வட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.என்.கே.ராமன், டி. தேவராஜ், தேனா தவமணி, ஆயிரம் விளக்கு ஆர்.பாபு, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் விஜய், சுந்தரேஷ், மோப்பு, முருகேசன் மற்றும் மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஈரோடு இறைவன் - ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதிக் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 14-வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை, மார்ச் 6 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் பதினான்காம் நாள் வி.க.நகர் வடக்குப் பகுதியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு உணவு வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 14 ஆம் நாளான

கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவக்ளின் இனிய பிறந்த நாளில் நேற்று (05.3.2025) வி.க.நகர் வடக்கு பகுதி 1) அருந்ததி நகர், மேட்டுப்பாளையம், பெரம்பூர். (71 அ வட்டம்) 2) ராஜீவ்காந்தி நகர், ஜமாலியா, பெரம்பூர். (74வது வட்டம்) ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், செ.தமிழ்வேந்தன், புனிதவதி எத்திராசன் எம்.சி, எம்.சரவணன் எம்.சி, பி. உதயசங்கர், மா.ருத்ரமூர்த்தி, என். புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம். இசட். அபாய், எம்.ஏ. டீக்கா, பரிமளா சரேஷ் பாபு இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



குவைத் தி.மு.க. அயலக அணி சார்பாக கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. கழக அயலக அணி குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில், செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா தலைமையில், நிர்வாகிகள் ஆயங்குடி ஜெ.சையது முஸ்தபா, சேகரை வெ.செல்லதுரை, குடந்தை சி.தியாகராஜன், திருவாரூர் ச.குமார், முத்துப்பேட்டை ம.சபரிவாசன், விழுப்புரம் இ.ஜஹாங்கீர், உளுந்தூர்பேட்டை மு.நஜீர் அகமது முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி வரவேற்புரை நிகழ்த்தினார், துணைப் பொருளாளர் திருவிடத்தனூர் ஏ எஸ். முஹம்மத் ரபீக் நன்றி உரை நிகழ்த்தினார்.

### பகுதிச் செயலாளர் ஐ.சி.எஃப்.வ.முரளிதரன் தலைமை!

# மக்கள் முதல்வரின் மனிதநேயம் 15 - கொளத்தூரில் 3 நாள் கலைவிழா!

## கலைஞானி கமல்ஹாசன் தொடங்கி வைக்கிறார்
## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு

சென்னை, மார்ச் 6

சென்னை கிழக்கு மாவட்ட திமுக கொளத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு 07.03.2025 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில், ஐ.சி. எப்.வ. முரளிதரன் தலைமையில் நடைபெறும் நமது பண்பாட்டுக் கலைகளை கொண்டாடும் முதல் நாள் நிகழ்ச்சியை- மக்கள் நீதிமையம் நிறுவன தலைவர் கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் துவக்கி வைக்கிறார். என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித் துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக கொளத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னி ட்டு, மனிதநேயம் 15, முதல்வரின் கலைக்களம் எனும் தலைப்பில் நமது பண்பாட்டு கலைகளை கொண்டாடும் கலை விழா 7.03.2025 அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது. மண்மணம் மாறாத கலைக் கொண்டாட்டமான இந்நிகழ்ச்சியில் 500 தமிழ் கலைஞர்கள் பங்கேற்கும் மாபெரும் கலை விழாவும், மகளிர் 25 சுய உதவிக்குழுவினர் வழங்கும் 200 அறுசுவை உணவுகளோடு கூடிய விருந்தோம்பலும் முதல்வரின் கலைக்களமாகக் கோலாகலமாக 7, 8, 9 ஆகிய மூன்று நாட்கள் தொடர்ந்து கொண்டாடப் படுகிறது.

இக்கொண்டாட்டத்தின் முதல் நாள் நிகழ்ச்சியை மக்கள் நீதிமையம் நிறுவன தலைவர் கலைஞானி கமல் ஹாசன் அவர்கள் துவக்கி வைத்து நிகழ்ச்சிளை கண்டு மகிழ்கிறார்.

இக்கலைவிழா நிகழ்ச்சிகளில் சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், சரிதா மகேஷ்குமார் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, தாவூத் பீ எம்.சி, மருத்துவர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்படுகிறார்கள்.

மேலும், முதல்வரின் கலைக்களம் நிகழ்ச்சியில் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.சி, இரா.கிரிராஜன் எம். பி, ப.தாயகம்கவி எம்.எல்.எ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம். எல்.ஏ, இ.பரந்தாமன் எம். எல்.ஏ, ப.ரங்கநாதன், இரா. விடுதலை, பகுதி கழக செயலாளர்கள் : ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: கே.சந்துரு, சி.மகேஷ்குமார். மாவட்ட து.செயலாளர் தேவஜவகர் பொதுக்குழு உறுப்பினர்கள்: சரிதா மகேஷ்குமார், எஸ். பன்னீர்செல்வம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: துரைகண்ணன், அசோக் குமார், ஆர்.எஸ்.சித்திக் எஸ். தனசேகர். மாமன்ற உறுப்பினர்கள்: சி.ஸ்ரீதணி, என். தாவூத் பீ. டி.யோகப்பிரியா, பி.அமுதா. கே.சாரதா. பகுதி நிர்வாகிகள் : பி.பழனி, இரா. இளங்கோவன், எஸ். கே.ரமேஷ், எல்.டி.தாமஸ். இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர். காஞ்சனா, பி.சூரி. வட்ட கழக செயலாளர்கள்: பா . அன்பரசு, டி.சந்திரசேகர், கே.ஜார்ஜ் குமார், என். பொன்முடி பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, பி.டி.சி. எஸ்.ரவி. எஸ்.முருகன், எம். பி.தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என். இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

செயற்கரிய செயலால் உயர்ந்த, தமிழ்நாட்டின் தவப்புதல்வருக்காக நடத்தப் படும் முதல்வரின் கலைக்களம் நிகழ்ச்சியில், சென்னை கிழக்கு மாவட்டதிற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள்,மாவட்ட/பகுதி/வட்ட அணிகளின் அமைப்பாளர்கள்துணை அமைப்பாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள். பகுதி வட்ட நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு பெருந்திரளாக வருகை தந்து முதல்வரின் பிறந்தநாளுக்கு பெருமை சேர்க்க வேண்டுகிறோம்.

### மலேசியா தளபதி பேரவை சார்பாக

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## கோலாலம்பூரில் இனிப்பு – அறுசுவை உணவு வழங்கப்பட்டது!

கோலாலம்பூர், மார்ச் 6 -

முதல்வர்.மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு. மலேசியா தளபதி பேரவை சார்பாக. செயலாளர்.ஹச்.எம். ஜெய்னுதீன். ஆலோசனையின் படி. தைப்பிங் கில். பொருளாளர் ஜே.சிவானந்தம் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. சென்னப்பன், ரமேஷ். மூர்த்தி. சாகுல் ஹமீது பங்கேற்றனர்.

அதைத் தொடர்ந்து. கோலாலம்பூர். சென்தூள்தி மூர்.ஏ. சாதிக்பாட்சா.டிவிஷ. தலைமையில். இனிப்புகள் வழங்கப்பட்டது. மகளிர் அணியை சார்ந்த. கதீஜா பீவி. சபியத்நிஷா. நசீமா பேகம். பார்வதி. சிங்கப்பூர் நூர்ஜகான். விஜயா பிரியா. தனுஷா.உமேரா. அசினா. தேவி. கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து. கோலாலம்பூர் தலைநகரம். மலேசியா உதயநிதி ஸ்டாலின் பேரவை. தலைவர்.எம்.கே. முகமது ஜெய்லானி தலைமையில். மதிய உணவு வழங்கப்பட்டது.ஹமீது மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிரம்பானில், எஸ் வினோத், மேல திருமலைராஜபுரம் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. அய்யனார், சிவக்குமார், மதிவாணன், செல்லப்பா, அதைத்தொடர்ந்து. ஜொகூர், சிம்பாரங்கம், அருண் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. சேட்டு,ரம்யா, பர்வீன், ஏராளமான நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கிள்ளாங்கில் பொதுக் குழு உறுப்பினர் க.புருசோத்தமன், தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. ரமேஷ் தனபால், வேல்முருகன் கலந்து கொண்டனர். துபாய். ஜபெல் அலி, தலை நகரத்தில் எஸ் காதர் மீரான். தோப்புத்துறை தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது.

சவுதியில்.ஆசிப்அலி சேட்டு தலைமையில். மதிய உணவு வழங்கப்பட்டது. டேய் துபாய் ரிவேரா ஹோட்டல்.ஆர். ஜாகிர் உசேன் தலைமையில் மதிய உணவு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழகத்திலும் மதுரையில் ஒருங்கிணைப்பாளர் உமர்ஷா, தலைமையில். இனிப்புகள் வழங்கப்பட்டது. நாகேந்திரன். புதுக்கோட்டையில். தகவல் தொழில்நுட்ப இணைச் செயலாளர். நிஜாம்கான் தலைமையில். மதிய உணவு வழங்கப்பட்டது. பர்சாத்அலி, ராமு ஜெயசீலன், திருவையாறு மடம் தெய்வானை தலைமையில் விவசாயிகளுக்கு உணவுகள் வழங்கப்பட்டது. கனிமொழி பவித்ரா, ரேகா, சுந்தர்ராஜன் இதனைத் தொடர்ந்து. அசாருதீன் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. மார்க்கெட் பாஸ்கர், தயாளன் பாபு, ஆரிஃப் கான் தமிழகத்திலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில்

# குடிநீர் தங்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கை!

## ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. அதிகாரிகளுடன் ஆலோசனை!

சென்னை, மார்ச் 6 -

இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகிய துறை சார்ந்த அதிகாரிகளுடன் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஆலோசனை கூட்டத்தில் குடிநீர், கழிவுநீர் பிரச்சனைகள், சாலை பணிகள், துப்புரவு பணிகள் போன்ற அனைத்து பிரச்சனைகளுக்கும் பொதுமக்களுக்கு சரி செய்து கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

இதில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ் மாமன்ற உறுப்பினர் திருமதி.கீதா சுரேஷ் 50வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆர்.சுரேஷ்குமார். சென்னை மாநகராட்சி அதிகாரிகள் லோகேஷ். பிரபுதாஸ். சிவக்குமார். பிரபு. மலர்விழி பழனி. சூப்பர்வைசர். நந்தகோபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.






சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி ஆலோசனை கூட்டம் நுங்கம்பாக்கம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு கழகப் பணியை சிறப்பாக நடைபெற எடுத்துரைத்து தளபதி 72 பொதுக்கூட்டம் குறித்தும் மற்றும் மகளிர் பாசறை நிகழ்ச்சியை குறித்தும் சிறப்புரையாற்றினார். இதில் மாநில இணைச்செயலாளர் குமரி விஜயகுமார், சென்னை மேற்கு மாவட்ட மண்டல உறுப்பினர், மாநில மகளிர் அணி சமூக வலைதள செயலாளர் டாக்டர் யாழினி, மாவட்ட அமைப்பாளர்கள் யோகேஸ்வரி சுந்தரேசன்,மகளிர் அணி தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் மற்றும் சமூக வலைதள பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.